BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரம் ஜூன் மாதத்தில் ப்ரைட் (Pride) கொண்டாட்டங்களை மெய்நிகர் முறையில் அனுசரிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 1, 2021) – ப்ராம்ப்ட்டன் நகரம் இந்த ஆண்டு ப்ரைட் (Pride) கொண்டாட்டங்களை, மெய்நிகர் முறையில் அனுசரிக்கிறது; இதில் மற்றும் LGBTTIQQ2SA சமுதாயத்தினர் தங்களின் பரந்து விரிந்த குரல்கள் மற்றும் கதைகளை அங்கீகரித்து பகிர்ந்துகொள்வதற்கான ஒரு பாதுகாப்பான இடத்தை உருவாக்க ஆன்லைன் நிகழ்ச்சிகள், நலமாக இருப்பதற்கான செயல்பாடுகள் மற்றும் நிகழ்த்துகலைகள் ஆகியவை உள்ளடங்கியுள்ளன.

ப்ரைட் (Pride) கொண்டாட்டங்கள் என்பது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட இயக்கமாகும், இது இரக்ககுணம், அரவணைக்கும் குணம் இரண்டையும் கொண்டாடுகிறது. ப்ராம்ப்ட்டனில் உபசரணை செய்யப்படும் ப்ரைட் (Pride) நிகழ்வுகள் நமது பலகலவையான தன்மையைக் கொண்டாடுகிறது; இது பல்வேறு ஈடுபாடுகள் மூலமும், தகவல்தொடர்புகொள்வதன் மூலமும், கலாச்சார நிகழ்வுகளுக்கு ஆதரவளிப்பதன் மூலமும், நகரம் முழுக்கவுமாக பரந்து விரிந்த தன்மை மற்றும் அனைவரையும் உள்சேர்க்கும் தன்மையை பதியவைப்பதற்கான கட்டுக்கோப்பினை உருவாக்குவதன் மூலம் செய்யப்படுகிறது. இந்த வருடத்தின் ப்ரைட் (Pride) வாரத்தின் சிறப்பம்சங்களில் அடங்குபவை:

- ஜூன் 1 ஆம் தேதியன்று ப்ராம்ப்ட்டன் நகர மேயர் பேட்ரிக் பிரவுன் அவர்களுடன் மெய்நிகர் முறையில் ஒரு கொடியேற்ற விழா
- ஜூன் 6 அன்று மாலை 6 முதல் 8 மணி வரை டோரோன்ட்டோவைச் சேர்ந்த எத்தியோப்பிய / எரித்திரிய பாடகரும்-பாடலாசிரியருமான அயோ லெய்லானி ஆகியோருடன் விட்ச் ப்ராஃபெட் (Witch Prophet) இன் நிகழ்த்துகலை நிகழ்ச்சிகள்
- ஜூன் 7 முதல் 11 வரை, மோயோ ஹெல்த் அண்ட் கம்யூனிட்டி சர்வீசஸ் (Moyo Health and Community Services ) அமைப்பினர் மதியம் தொடங்கி மதிய உணவு வகைகள் மற்றும் அவற்றை கற்பது பற்றிய நிகழ்ச்சிகள்
- ஜூன் 7 அன்று இரவு 8 மணி முதல் 9 மணி வரை சிட்டி ஆஃப் பிராம்ப்டன் ரிக்ரியேஷன் (City of Brampton Recreation) அமைப்புடன் சேர்ந்து ஒரு யோகா மற்றும் தியான நிகழ்ச்சி
- ஜூன் 8 அன்று இரவு 8 மணிக்கு அல்கோமா பல்கலைக்கழகம் விவாதக்குழு ஒன்றை நெறிப்படுத்துதல்
- ஜூன் 12 ஆம் தேதி இரவு 8 மணிக்கு ப்ராம்ப்டன் நிகழ்த்துகலை அமைப்பினரால் நிகழ்த்தபடும் நிகழ்ச்சிகள்

**ப்ரைட் இன் தி ஸ்க்வேர்**

ஜூன் 13 அன்று, TD வங்கிக் குழுமத்தினால் வழங்கப்படும் பிரைட் இன் தி ஸ்க்வேர் நிகழ்ச்சியில் நாள் முழுக்கவுமாக மெய்நிகர் குடும்ப நடவடிக்கைகள், ஃபே & ஃப்ளஃபியின் (Fay & Fluffy's) கதை கேட்கும் நேரத்துடன் காலை 11 மணிக்கு தொடங்குகிறது; மாலை 6 மணிக்கு லவுட் & ப்ரவுட் (Loud & Proud ) உடல்பொருத்த நடனம் சிட்டி ஆஃப் பிராம்ப்டன் ரிக்ரியேஷனால் நடத்தப்படுகிறது; குயீரியாசிட்டி: இது மேங்கோ லாஸி (Mango Lassi), ஊர்வா கான் (Urvah Khan), குராத் தார் (Qurat Dar), அல்மாசி (Almasi) மற்றும் சர்கோன் (Sargon) ஆகியோருடன் இரவு 7 மணிக்கு சிறப்பு விளக்கக்காட்சி. இரவு 8:30 மணிக்கு, மைக்கா பார்ன்ஸ் அவர்களின் நேரலை நிகழ்ச்சி இருக்கும்.

பங்கேற்க வருகை புரியவும்: Pride in the Square.
ப்ரைட் இன் ப்ராம்ட்டன் நிகழ்ச்சிகள் TD வங்கிக் குழுமத்தினால் பெருந்தன்மையாக வழங்கப்படுகின்றன. ப்ரைட் வாரத்திற்கு (Pride Week) என்று திட்டமிடப்பட்ட செயல்பாடுகளின் முழு பட்டியலுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/pride.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ரைட் நிகழ்ச்சிகள் LGBTQ + சமூகத்திற்கு அவர்களின் பரந்து விரிந்த குரல்களை மற்றும் கதைகளை பகிர்ந்து கொள்ளவும் கொண்டாடவும் அதிகாரம் அளிக்கின்றன; மேலும் சமூகத்தில் உள்ள பல முகங்களையும் தனித்தன்மைகளையும் குடியிருப்பாளர்களுக்குக் கற்பிக்கின்றன. ப்ராம்ப்ட்டன் நகரம் பலகலவையான ஒரு நகரம் ஆகும்; இது ப்ரைட் (Pride) போன்ற கொண்டாட்டங்கள் மூலமாக பரந்து விரிந்த தன்மையைக் கொண்டாடுகிறது மற்றும் ஒற்றுமை, வலிமை மற்றும் ஈடுபாட்டை குடியிருப்பாளர்கள் உணர அனுமதிக்கிறது. "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரம் அதன் மாறுபட்ட சமூகங்களை அங்கீகரித்து ஆதரிக்க கடமை கொண்டிருக்க உறுதியளித்துள்ளது; இது எங்கள் சேவைகள் மற்றும் திட்டங்கள் அனைத்திலும், அனைவரையும் உள்ளடக்கிய தன்மை மூலம் சாத்தியமாகிறது. எங்கள் பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் உள்சேர்த்தல் மூலோபாயத்தின் மூலம், சமூகத்தின் பிரதிபலிப்பாக விளங்கும் பணியாளர்களை எங்கள் கவனம் ஈர்க்கிறது மற்றும் வளர்க்கிறது. "

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம்,

தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca